Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 27 2023

புதன்கிழமை டிசெம்பர் 27, 2023 | ஒளி: 09 கதிர் 158 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## “யுக்தியா”வில் 13,666 பேர்

“யுக்தியா” என்ற தேடுதல் நடவடிக்கையின் ஊடாக, கடந்த ஒரு வாரத்துக்குள் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் தடுப்புச் சோதனையில் 13,666 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இலங்கை சிறைச்சாலைகளில் 11,762 தடுத்து வைப்பதற்கான வசதிகளே உள்ளன.

தொடர்ச்சி P2




## திரிபோஷாவில் வேதிப்பொருளை இரு மடங்கில் அதிகரிக்க முடிவு

குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் போஷாக்கான உணவாக உட்கொள்ளும் திரிபோஷாவில் உள்ள இரசாயனங்களை (அஃப்லாடெக்சிக்சின்) இரு மடங்காக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

ஜனாதிபதி தேர்தலுக்கு

# வருவீர்களா? இல்லையா?

## அமைச்சரின் கேள்விக்கு ஜனாதிபதி அளித்த பதில்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என நான் எங்கும் கூறவில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆளும் கட்சியின் தலைவர்கள் குழு முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

நத்தார் விடுமுறைக்கு முன்னதாக அமைச்சர்கள் குழுவுடன் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அமைச்சர் ஒருவர் ஜனாதிபதியிடம், “ஐயா, சிலர் இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கு நீங்கள் வரமாட்டீர்கள் கூறுகின்றனர். இதில் எது உண்மை இல்லை?”

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, “நான் இன்னும் வரவில்லை, வரவில்லை. எனினும், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இன்னும் நிறைய வேலைகள் உள்ளன” என்றார்.

கடன் மறுசீரமைப்பு திட்டத்தை முடிக்க வேண்டும். புதிய பொருளாதாரம் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு நேரம் தேவை என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஜனவரி 19ஆம் திகதி முதல் நாடு தழுவிய ரீதியில் கூட்டத் தொடரை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தை மையப்படுத்தி பிரதான கூட்டம் ஒன்றை நடத்திய பின்னர், நாடு முழுவதும் இந்த கூட்டத் தொடரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கெஹலியவிடம் சி.ஐ.டி விசாரணை



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் இல்லத்திற்குச் சென்று செவ்வாய்க்கிழமை (26) பிற்பகல் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்றே இவ்வாறு விசாரணைகளை முன்னெடுத்து, வாக்குமூலத்தை பதிவு செய்துகொண்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ‘கொவிட்’ பரிசோதனையில் திருப்தியே இல்லை



‘கொவிட்’ வைரஸ் தொடர்பாக தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக மருத்துவமனை மட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள அமைப்பு திருப்திகரமாக இல்லை என்று சுகாதார தொழில்வல்லுனர்கள் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2



## சுனாமி பேபியும் நினைவுகூர்ந்தார்

வ.சக்தி

‘சுனாமி பேபி’ அவரது இல்லத்தில் அமைந்துள்ள நினைவுத்தூபியில், சுனாமி அனர்த்த தினமான செவ்வாய்க்கிழமை (26) காலையில் அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ச்சி P2

## குழந்தையை கொன்றது டெங்கு; ஒரேநாளில் 40 பேர் அனுமதி



எம்.றொசாந்த்

யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்கு நோயினால் குழந்தை ஒன்று திங்கட்கிழமை (25) உயிரிழந்துள்ளது. அன்றைய தினம் மாத்திரம் 40 பேர் டெங்குகாய்ச்சலுடன் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோரை

## கதறியழுது உறவுகள் அஞ்சலி செலுத்தினர்

இன்றைக்கு 19 வருடங்களுக்கு முன்னர் நாட்டின் கரையோர பிரதேசங்களில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த தங்களுடைய உறவினர்களை நினைவுகூர்ந்து நாடளாவிய ரீதியில் பல்வேறான நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு,கிழக்கு உள்ளிட்ட கரையோர பிரதேசங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பங்கேற்றிருந்த பலரும், கதறியழுது தங்களுடைய உறவினர்களை நினைகூர்ந்தனர். மலையகம் உள்ளிட்ட இதர பிரதேசங்களில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மேலதிக படங்கள் பக்கம் 5

(தமிழ் மிரர் நிருபர்கள்)

30,000 மின் வாடிக்கையாளர்கள்

## ஓர் அலகேனும் பாவிக்கவில்லை



கடந்த மூன்று மாதங்களாக ஒரு மின்சார அலகேனும் பயன்படுத்தாத 30,000 வாடிக்கையாளர்கள் இருப்பதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இந்த இணைப்புகளில் வீடுகளும், வர்த்தக நிறுவனங்களும் உள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## யாழில் கைதானவர்களில் 70 சதவீதம் போதைக்கு அடிமை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் கைதானவர்களில் சுமார் 70 சதவீதமானவர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என மருத்துவ பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

## வழிநடத்தி வரும் 30 பேரை கொண்டுவர துரித ஏற்பாடு



வெளிநாடுகள் இருந்தவாறு இலங்கைக்குள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக்குழுக்களை வழிநடத்தி வரும் 30 பேரை கைது செய்து, நாட்டுக்கு கொண்டு வருவதற்காக விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

டுபாய் நாட்டில் இருக்கும் 29 பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் மற்றும் பிரானஸில் உள்ள ஒருவர் சம்பந்தமான தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த குற்றவாளிகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்காக சம்பந்தப்பட்ட நாடுகளுடன் ஏற்கெனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம் என்றார்.

தொடர்ச்சி P2

## கடத்திச் சென்று தாக்கி, அபகரித்த மூவர் கைது

ரஸீன் ரஸ்மின்



புத்தளம், வனாத்தவில்லு - எழுவன்குளம் பகுதியில் நபர் ஒருவரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்தி பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை கொள்ளையடித்த கும்பலொன்றினைச் சேர்ந்த மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக வனாத்தவில்லுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## “எமது போராட்டங்களால் எங்களுக்கு உதவிகள் மறுப்பு”

நடராசா கிருஸ்ணகுமார்



சுண்ணக்கல் அகழ்விற்கு எதிராகப் போராட்டம் நடாத்துவதன் காரணமாக ஐந்து கிராமங்களுக்கான வெள்ளப் பாதிப்புகள் உட்பட அனைத்து உதவிகளும் கிடைப்பதில்லை என அனைத்து மக்கள் ஒன்றியத் தலைவர் வல்லிபுரம் சிறிபாஸ்கரன் தெரிவித்தார்.

கரியாலைநாகபடுவான், பல்லவராயன்கட்டு ஆகிய குளங்கள் வான் பாய்ந்ததன் காரணமாக கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி போன்ற கிராமங்களுக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்ட போது அரச உயரதிகாரிகள் வருகை தரவில்லை. பாதிப்புகளை பார்வையிடவுமில்லை என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# திரிபோஷாவில் வேதிப்பொருளை இரு மடங்கில் அதிகரிக்க முடிவு

இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் முன்னிலை சோசலிசக் கட்சியின், பிரசார செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

“திரிபோஷா உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மக்காச்சோளத்தில் இருக்கக்கூடிய ‘அஃப்லாடெக்சின்’ அளவை இரட்டிப்பாக்க ஒப்புதல் கிடைத்துள்ளது.இது ஒரு மோசமான நிலைப்பாடாகும். குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் உயிருக்கு இதனால் ஆபத்து ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திரிபோஷாவில் உள்ள ‘அஃப்லாடெக்சின்’ அளவு, ஒரு பில்லியன் சோளப் பகுதிக்கு 5க்கு 10 சதவீதம் வரை அதிகரிக்கப்படுகின்றது.

நூற்றுக்கு 5 சதவீதத்திற்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் அதனால் எவ்வித பாதிப்பும் இல்லை. ஆனால் 5ற்கும் அதிகமாகும் பட்சத்தில் இதனால் உடலுக்கு மோசமான விளைவுகள் ஏற்படும்.

‘அஃப்லாடெக்சின்’ என்ற வேதிப்பொருளை உட்கொள்வதால் கல்லீரல் சேதப்படுத்தும் என்பதால், அந்த இரசாயனம் புற்றுநோயாக மாறும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாகப் பயன்படுத்துவதால் இந்த நிலைமை ஏற்படுகிறது என்றார்.

தேங்காய் எண்ணெய் மற்றும் திரவ பாலில் ‘அஃப்லாடெக்சின்’ கலந்திருப்பது குறித்து நாட்டில் பெரும் சர்ச்சை நிலவியது.

இவ்வாறான நிலைமை ஏற்படும் பட்சத்தில் திரிபோஷா உற்பத்தியை இலங்கையில் இடைநிறுத்திவிட்டு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது” என அவர் சுட்டிக்காட்டினார்.

# வருவீர்களா? இல்லையா?

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர் அதிகாரிகள் குழு மற்றும் ஏனைய குழுக்களுக்கான பிரதிநிதிகள் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் நியமிக்கப்படுவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## “யுக்தியா”வில் 13,666 பேர்

சமீபத்திய தேடுதலுக்கு முன்னரே சிறைச்சாலைகளில் 248.5% சதவீதம் கைதிகள் உள்ளனர். ஒரு கைதிக்கான உணவுக்காக நாளொன்றுக்கு 800 ரூபாய் செலவாகின்றது. ”யுக்தியா” சந்தேக நபர்களுக்கு 14 நாட்களுக்கு உணவளிப்பதற்கான செலவு 153.05 மில்லியன் ரூபாயாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஓர் அலகேனும் பாவிக்கவில்லை

30,000 பேரில், வெளிநாடுகளுக்குச் சென்ற மின்சார பாவனையாளர்களும், மற்றொரு பிரிவினர் வசிப்பிடத்தை மாற்றியவர்களும் உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

# கெஹலியவிடம் சி.ஐ.டி விசாரணை

இலங்கைக்கு தரமற்ற நுண்ணுயிர் எதிர்ப்பிகளை இறக்குமதி செய்தமை தொடர்பிலேயே அவரிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, ரம்புக்வெல்லவுக்காக சட்டத்தரணிகள் குழுவொன்றும் ஆஜராகியிருந்தது.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த, மேற்படி அமைச்சின் மருத்துவ வழங்கல் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் டொக்டர் கபில விக்ரமநாயக்க மற்றும் சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வழிநடத்தி வரும் 30 பேரை கொண்டுவர துரித ஏற்பாடு

இந்த வேலைத்திட்டத்திற்கு எவர் தடையேற்படுத்தினாலும் அடுத்த ஆறு மாதங்களுக்கு நாட்டிற்குப் பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் விற்பனை முற்றாக நிறுத்தப்படும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# குழந்தையை கொன்றது டெங்கு; ஒரேநாளில் 40 பேர் அனுமதி



டிசெம்பர் மாதத்தில் திங்கட்கிழமை (25) வரையில் 945 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் டெங்கு நோய்க்குச் சிகிச்சை பெற்றுள்ளனர். அதேவேளை, குழந்தைகள் விடுதி டெங்கு நோயாளிகளால் நிரம்பி வழிகிறது என்றார். யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குகாய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் தங்கள் உடல்நிலை தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதனால், பொதுமக்கள் தங்கள் சார்ந்த இடங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஒருவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடுவது சால சிறந்தது என்றார்.

யாழ்ப்பாணம், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## 70 சதவீதம் போதைக்கு அடிமை


யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில், போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தமை, விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் 190 பேர் கைது செய்யப்பட்டனர்.

**“ மருத்துவ பரிசோதனை அறிக்கையின்படி, 190 பேரில் 125 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது**

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அவர்களை சட்ட வைத்திய அதிகாரியின் முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனையும் மேற்கொண்டனர்.

மருத்துவ பரிசோதனை அறிக்கையின்படி, 190 பேரில் 125 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ள நிலையில், இவர்களில் சுமார் 25 பேரை மறுவாழ்வு மையங்களுக்கு நீதிமன்றங்களின் ஊடாக அனுப்ப பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ‘கொவிட்’ பரிசோதனையில் திருப்தியே இல்லை

மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு குறிப்பிட்ட சோதனை வசதி மற்றும் பரிசோதனை கோரிக்கை முறை இல்லை என்றும் அவர் தெரிவித்தனர். கொவிட் அறிகுறிகள் அல்லது கொவிட் நோயாளிகள் என்று மருத்துவர்களால் சந்தேகிக்கப்படுவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்றார்.

‘கொவிட்’க்கு மட்டுமின்றி, எந்த நோய்க்கும் சந்தேகிக்கப்படும் நோய் தொடர்பான மருத்துவப் பரிசோதனையை நடத்துவது இயல்பான நிலைதான் என்றாலும், ‘கொவிட்’க்கு மட்டும் இவ்வாறு மேற்கொள்ளப்படாமல் இருப்பது சிக்கலாக உள்ளது. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் மாதிரிப் பரிசோதனை நடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் முடிவை மட்டும் நாட்டுக்கு முன்வைத்தால் போதாது என்றும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சுகாதாரத்துறை செயலாளருக்கு, ரவி குமுதேஷ் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

## கடத்திச்சென்று தாக்கி, அபகரித்த மூவர் கைது

வான் ஒன்றில் பயணித்த குழுவினர் தங்களை பொலிஸார் எனக் கூறி, குறித்த நபரை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எலுவன்குளம், ரால்மடுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மேலும் மூவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வானும் இதுவரை கைப்பற்றப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் வன்னாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# “எமது போராட்டங்களால் எங்களுக்கு உதவிகள் மறுப்பு”

எமது பிரதேசத்தில் உயிர் நாடியாக உள்ள வேரவில் பிரதேச வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் ஒன்றும், இன்னொரு வாகனம் என இரு வாகனங்கள் நோயாளர்களை முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கும் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கும் ஏற்றிச் செல்லும். தற்போது வைத்தியசாலையில் ஒரு வாகனமும் இல்லை. இது மேற்படி ஐந்து கிராமங்களில் வாழும் 2,000 குடும்பங்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது என்றார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து பாலாவி வரையான 17 கிலோ மீற்றர் வரையான வீதி வேலைகள் தொடங்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. எமது கிராமத்தின் நிலைமை தொடர்பாக அரச உயரதிகாரிகளிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்துள்ளோம். வீதி தொடர்பாக பல்லவராயன்கட்டுச் சந்தியில் ஆர்ப்பாட்டம் நடாத்தினோம். அங்கு வருகை தந்த உயரதிகாரிகள் எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிரான நாம் நடாத்துகின்ற தொடர் ஆர்ப்பாட்டம் காரணமாக எமது கிராமங்களுக்கான உதவிகள் கிடைக்காமல் செய்யப்பட்டு ஐந்து கிராமங்களிலிருந்து மக்களை முற்றாக வெளியேற்றுவதன் மூலம் சுண்ணக்கல் அகழ்வினை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை எங்களால் இனங்காணப்பட்ட சில அரசியல்வாதிகள் முன்னெடுக்கின்றனர்.

இதற்கு மாவட்டத்தின் உயரதிகாரிகளும் துணை போகின்றனர். எமது பிரதேசத்தில் வைத்தியர்கள் நெருக்கடி, அம்புலன்ஸ் இல்லை, வீதிப் புனரமைப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகளில் ஆசிரியர் வள நெருக்கடி என்பன காணப்படும் நிலையில் நாம் நடாத்தும் போராட்டங்களை ஒடுக்குவதற்காக எமது கிராமங்கள் உதவிகள் கிடைக்காமல் தடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார். சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக இன்றுடன் 148 ஆவது நாளாக போராட்டம் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு

# “3 அரசுகள் கூட்டு பொறுப்பேற்க வேண்டும்” மலையக மாற்றம் நிகழ்வில் மனோ கணேசன்

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டுத் தார்மீக பொறுப்பேற்க வேண்டுமென என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

நண்பர் இராதாகிருஷ்ணன் இந்த மகத்தான நிகழ்வை நடத்தி, மலையக தமிழ் மக்களின் வரலாற்று, நிகழ்கால அவலங்களை, உரை, கலை வடிவங்களில் இந்த மேடையில் கூற வைத்து விட்டார் என்றார்.

மலையக மக்கள் முன்னணி சார்பில் இராதாகிருஷ்ணன் எம்பி தலைமையில் நுவரெலியாவில் ஞாயிற்றுக்கிழமை (24) நடைபெற்ற 200ல் மலையக மாற்றம் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டின் சிங்கள, ஈழத்தமிழ், முஸ்லிம் சகோதர இனத்தவர் தங்கள் ஓட்டங்களை 1948லேயே ஆரம்பித்து விட்டார்கள். மலையக தமிழர் தமது குடியுரிமையை சட்டப்படி முழுமையாகப் பெற்றுக்கொள்ளவே 2003ஆம் வருடம் ஆகிவிட்டது. ஆகவே, நாம் எமது ஓட்டத்தைத் தாமதமாக ஆரம்பித்த பிரிவினர் ஆகும். எமது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார அடைவுகள், சகோதர இனத்தவர்கள் அடைந்துள்ள, இலக்குகளை விட குறைவாக இருப்பது ஆச்சரியம் அல்ல. ஆனால், இந்த இருபது வருடங்களில் ஏனையோர் மரதன் ஓடும்போது நாம் நூறு மீட்டர் ஓடி வேகமாகப் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம். எனினும் இன்னமும் நாம் போக வேண்டிய தூரம் கணிசமாக இருக்கிறது. நாம் அடையவேண்டிய வளர்ச்சியை அடையாமல் குறை வளர்ச்சியில் நிற்கிறோம். மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு பொறுப்பேற்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் பாராளுமன்றம் வரும் போதெல்லாம், 1948ல் இலங்கையின் அந்நிய செலாவணி தொகை ஆசியாவிலேயே ஜப்பானுக்கு அடுத்தபடியாக அதிகமாக இருந்தது என்று பெருமையாகக் கூறுவார். அது உண்மை. அதன் பின்னுள்ள கசப்பான உண்மை என்ன? அந்த அதிக தொகை அந்நிய செலாவணியை இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தி பெற்றுத் தந்தது நமது மக்களின் தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட உழைப்பினால் கிடைத்த ஏற்றுமதி வருமானம் ஆகும். ஆனால், இதற்காக 1948லேயே முதல் சுதந்திர இலங்கை அரசு எமக்குச் செய்த கைம்மாறு என்ன? எமது குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடற்ற மக்கள் ஆக்கியதே அந்த கைம்மாறு ஆகும்.

1964இல் எம்மை கலந்தாலோசித்து எமது உடன்பாடுகளைப் பெறாமலேயே இந்திய அரசு, எம்மில் பெரும்பான்மையோரை நாடு கடத்த உடன்பாடு தெரிவித்தது. அன்று ஏற்படுத்தப்பட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக எமது மக்கள் கால்நடைகள் போல் நாடு கடத்தப்பட்டு, இங்கே நாம் அரசியல்ரீதியாக பலவீனபடுத்தப்பட்டோம். இந்த ஒப்பந்தம் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும் என்றார்.





## மாடு அறுக்கும் தொழுவம் குறித்து முறைப்பாடு

நானுஓயா பிரதான நகரில் அமைந்துள்ள மாடு அறுக்கும் தொழுவத்தில் சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அக்கிராம மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

நானுஓயாவில் முறைசாரா மற்றும் சட்டவிரோத பசுக்கொலை மற்றும் மாட்டிறைச்சி வியாபாரம் நடைபெறுவதாக உரிய ஆதாரங்களுடன் கூடிய புகைப்படங்கள் நானுஓயா பிரதேசவாசிகள் குழுவொன்றும் இதில் அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பினர்கள் இணைந்து எழுத்து மூலம் அடங்கிய கையொப்பங்கள் மற்றும் உரிய தீர்வை வழங்குமாறு கோரி ஜனாதிபதி சுகாதார அதிகாரிகள், பௌத்த விவகார அமைச்சர், நீதி அமைச்சர், மத்திய மாகாண ஆளுநர் மற்றும் தலைமை மாநகர சுகாதார பரிசோதகர் உட்பட 19 இடங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், அடிக்கடி இப்பகுதியில் சட்டவிரோத மாடு வெட்டும் செயற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில், உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

"ஆதாரப்பூர்வமான முறைப்பாடுகள் கிடைத்தால்

# "கடுமையான நடவடிக்கை"



பாடசாலைகளிலும் தனியார் வகுப்புகளிலும் சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது போதைப்பொருட்கள் தொடர்பில் ஆதாரப்பூர்வமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் கூறியுள்ளார்.

மேலும், நாட்டில் பல்வேறு பகுதிகளில் தற்போது போதைப்பொருட்கள் ஒழிப்பு மற்றும் தெளிவூட்டல் வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதிலும் சமீப காலமாக ஒரு சில பாடசாலைகள் தனியார் வகுப்புகளில் இருந்து சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப்பொருட்கள் தொடர்பில் முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளன.

இதனை நான் வன்மையாகக் கண்டிப்பதோடு, சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தகுதி தராதரம் பார்க்காமல் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்ற ரீதியில் அவர்களுக்குரிய பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திலிருந்து மாகாண ஆளுநர்களுக்கும் கல்விப் பணிப்பாளர்களுக்கும் மத்திய அரசாங்கத்தின் கல்வி செயலாளருக்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு மேற்படி விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் அறிக்கையையும் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்புமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றார்.




## பஸ் விபத்தில் 8 மாடுகள் பலி

■ றொஸரியன் லெம்பேர்ட்

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, நாயாத்துவழி பகுதியில் திங்கட்கிழமை (25) மாலை இடம்பெற்ற விபத்தில் 8 மாடுகள் உயிரிழந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணிகளுடன் அதிவேகமாகப் பயணித்த தனியார் பஸ் நாயாத்து வழி பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீதியால் சென்று கொண்டிருந்த மாடுகளின் மீது மோதியதில் 8 மாடுகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மாடுகள் பலத்த காயமடைந்துள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சாலம்பன் கிராமத்தைச் சேர்ந்த பண்ணையாளர்களின் மாடுகள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் மாடுகளை அடைக்கும் இடத்திற்கு கொண்டு செல்லும்போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## அலுமாரிக்குள் கசிப்பு போதல்கள்; பெண்ணொருவர் கைது

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் வீடொன்றில் அலுமாரிக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கசிப்பு போத்தல்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த வீட்டை சோதனையிட்டபோது, வீட்டினுள் இருந்த அலுமாரி ஒன்றிலிருந்து, சுமார் 30 கசிப்பு போத்தல்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், வீட்டிலிருந்த பெண்ணையும் கைது செய்துள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## 240 ஏக்கர் நெற்பயிர் அழிவு

■ நடராஜா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு-வற்றாப்பளையில் சுமார் 240 ஏக்கர் நெற்பயிர் அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

முத்தையன்கட்டுக்குளம், மதவாளர்சிங்கம்குளம், முறிப்புக்குளம் என்பன நந்திக் கடலில் கலந்ததன் காரணமாக வற்றாப்பளையின் வடக்கு வெளி, அம்மன் கோவில்வெளி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்பயிர்ச் செய்கை பெரும் அழிவுகளை எதிர்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

நந்திக் கடலினை முழுமையாக நிரம்ப விடாமல், நேரத்துடன் பெருங்கடலுடன் கலக்கும் பகுதியில் வெட்டி விடுவதன் மூலம், வற்றாப்பளை பகுதியில் விவசாயத்தினை பாதுகாக்க முடியும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், அவ்வாறு நேரத்துடன் நந்திக் கடல் வெள்ளத்தினை வேகமாக பெருங்கடலுடன் கலக்க வைக்க முடியாது. ஏனெனில் நந்திக் கடலின் கடல் உணவுப் பெருக்கம் பாதிக்கப்படும் என கடற்றொழிலாளர்களும் கருத்துகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான நிரந்தர தீர்வாக வட்டுவாகல் பாலத்தில் இருந்து வட்டுவாகல் பக்கமாக குறைந்தது 600 மீற்றர் துரமாவது நந்திக் கடலில் காணப்படுகின்ற சேற்றினை அகற்ற வேண்டும் என்பதே அனைவரதும் கோரிக்கையாக உள்ளது.



உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கைக்கு

## "மானியத்தை பெற்றுத் தாருங்கள்"

வடக்கில் அடுத்த பருவகாலத்தில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையை சுமார் 150 ஹெக்ரேயரில் மேற்கொள்வதற்கு 50 வீத மானியத்தை பெற்றுத் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துபோதே குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் நவீன மயப்படுத்தப்பட்ட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், வடக்கு விவசாயிகளுக்காக எடுத்துவரப்பட்ட சுமார் 21,000 கிலோ உருளைக்கிழங்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாகவும் இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இச்சந்திப்பில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தாக்குதலுக்குள்ளான கான்ஸ்டபிள்

## வைத்தியசாலையில் இருந்து தப்பியோட்டம்




■ ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி, தளுவ - நிர்மலாபுர பிரதேசத்தில் நத்தார் விருந்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளகியதாக தெரியவந்துள்ளது.

குறித்த புதிய பொலிஸ் கான்ஸ்டபிள் திங்கட்கிழமை (25) இரவு தனது நண்பர்கள் சிலருடன் கலந்து கொண்ட விருந்தின்போது, குழுக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள வாக்குவாதம் முற்றிய நிலையில், அங்கிருந்த சிலர் பொலிஸ் கான்ஸ்டபிளையும் அவருடன் வந்த நண்பர்களையும் தாக்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதுபற்றி நுரைச்சோலை பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில், சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸ் குழு, தாக்குதலுக்கு உள்ளான புதிய பொலிஸ் கான்ஸ்டபிளை சிகிச்சைக்காக வைத்திசாலையில் அனுமதித்துள்ளனர்.

பின்னர் அவர், வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## "சட்டவிரோத செயற்பாடுகளால் இயற்கை அனர்த்தங்கள் அதிகரிப்பு"

■ எம்.எஸ்.எம். ஹனீபா

மக்களின் சட்டவிரோத செயற்பாடுகளினாலேயே இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

20ஆவது தேசிய பாதுகாப்பு நினைவு தினத்தை முன்னிட்டு, 'நிலையான அபிவிருத்தியின் மூலம் அனர்த்தத்திற்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய சமூகத்தை உருவாக்குதல்' எனும் தொனிப் பொருளில் அம்பாறை மாவட்ட பிரதான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (26) அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் விரிவான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களைக் குறைப்பதற்கு அரச திணைக்கள தலைவர்கள் மற்றும் முப்படைகள் ஆகியோர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். மேலும் எதிர்காலங்களில் ஏற்டக் கூடிய அனர்த்தங்களை எதிர்கொண்டு மக்களுக்கும் தேசிய பாதுகாப்புக்கும் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும். பல்வேறு வகையான இயற்கை அனர்த்தங்களை உலக நாடுகள் எதிர்நோக்கி வருகின்றன. இதன் காரணமாக மனித உயிர்கள், கட்டுமானங்கள், பொருளாதாரம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் என்பவற்றில் பாரிய அழிவை ஏற்படுத்தி இதன் விளைவாக உலக நாடுகள் பொருளாதார பின்னடைவைச் சந்தித்துள்ளன. இதற்கு பிரதான காரணம் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளில் அனர்த்த அபாய குறைப்பு, சுற்றுச் சூழல் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்ற நழுவல் போக்கு போன்ற விடயங்களில் ஒன்றாகவும் முறையாகவும் செயற்படாமையின் காரணமாக அனர்த்த ஆபத்து வலுவடைந்தன் விளைவாக அனர்த்தங்கள் ஏற்படுவதுடன் இழப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளது என்றார்.

"அஸ்வெசும திட்டத்துக்கு

## ஜனவரியில் விண்ணப்பங்கள் கோரப்படும்"

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு திட்டமாக வழங்கப்படும் அஸ்வெசும நிவாரண வேலைத்திட்டத்துக்காக ஜனவரி மாதத்தில் மீண்டும் விண்ணப்பம் கோருவதற்கு தீர்மானித்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலையில் பிரதேசத்தில் திங்கட்கிழமை (25) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், அஸ்வெசும நிவாரண வேலைத்திட்டத்துக்காக ஜனவரி மாதத்தில் மீண்டும் விண்ணப்பம் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நிவாரண திட்டத்துக்கு முறையாக விண்ணப்பிக்க முடியாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. அதன் பிரகாரம் ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய. எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இதற்காக மீண்டும் விண்ணப்பம் கோரத் தீர்மானித்திருக்கிறோம்.

அஸ்வெசும நிவாரண திட்டத்தின் முதலாம் கட்டத்தை செயற்படுத்தி இருந்தோம். இதன்போது தகுதியானவர்களைத் தெரிவு செய்வதில் சில நடைமுறை பிரச்சினைகளுக்கு நாங்கள் முகங்கொடுத்திருந்தோம்.

அத்துடன், அனுபவமுள்ள அரச அதிகாரிகளை எவ்வாறு இந்த வேலைத்திட்டத்துக்கு இணைத்துக்கொள்வது போன்ற விடயங்கள் அனைத்தையும் சிந்தித்தே ஜனவரியில் மீண்டும் அஸ்வெசும நிவாரண திட்டத்துக்கு விண்ணப்பம் கோரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார்.

## சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பம்



2024ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரைக்கான பருவகாலம் பூரணை தினமான செவ்வாய்க்கிழமை (26) ஆரம்பமாகியது.

சிவனொளிபாதமலை கடல் மட்டத்திலிருந்து (7,359 அடி) உயரமான கூம்பு வடிவிலான மலையாகும். இம்மலையானது சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களுக்கிடையிலான எல்லையில் அமைந்துள்ளது.

மலையுச்சியில் காணப்படும் 1.8 மீட்டர் அளவான பாறை அமைப்பு கௌதம புத்தரின் காலடி சுவடாகப் பௌத்தர்களால் கருதப்படுகிறது.

இந்து சமயங்களின் நம்பிக்கைகளின்படி, சிவனின் காலடி சுவடாகக் கருதப்படுவதோடு இஸ்லாமியர்கள் இதை (பாவா ஆதம் மலை) ஆதாமின் காலடி சுவடாகக் கருதுகின்றனர்.

சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை முன்னிட்டு, நல்லத்தண்ணீர் நகரில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்துக்கு மேலதிகமாக சீத்தகங்குலதன்ன, இந்திக்கட்டுபான, மழுவ முதலான இடங்களில் தற்காலிக பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

இதனை முன்னிட்டு ஹட்டன் நல்லத்தண்ணீர் புகையிரத இணைப்பு பஸ் சேவை ஹட்டன் டிப்போவினால் நடத்தப்படுகிறது.

இரத்தினபுரி வழியாகவும், ஹட்டன் வழியாகவும் சிவனொளிபாத மலைக்கான யாத்திரையை மேற்கொள்ள முடியும்.

மது அருந்த மற்றும் எந்தவிதமான இசைக்கருவிகள் கொண்டு செல்ல முடியாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பக்தர்கள் மற்றும் பார்வையாளர்கள் என பல எண்ணிக்கையிலான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கவனமின்றி அசட்டையாக இருப்பது பேராபத்துக்கே வழிசமைக்கும்

உலகையே கடுமையாக அச்சுறுத்திய கொவிட்-19 நிறைவுக்கு வந்து விட்டதெனப் பெருமூச்சு விட்டிருந்த நிலையில், மக்களிடத்தில் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில், அதன் திரிபு கொஞ்சமாகத் தலையைத் தூக்கியுள்ளமை, மீண்டு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜே.என்-1 கொவிட்-19 வைரஸ் திரிபு, நாட்டுக்குள் ஊடுருவி விடுமாயின், பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

கொரோனா அலைகளுக்கு முகங்கொடுத்து, மீண்டெழுந்திருக்கும் நாடு என்பது ஒருபுறம் இருக்க, பொருளாதார பாதிப்பில் இருந்து மீண்டெழவில்லை. மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் சுமை, நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இந்த வைரஸ் திரிபு மீண்டுமொரு முடக்கத்துக்கு வழிசமைக்குமாயின் பாரிய பிரச்சினைகளைச் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

ஜே.என்-1 கொவிட்-19 வைரஸ் திரிபால் இலங்கைக்கு ஆபத்து மிகவும் குறைவு என அறிவித்துள்ள சுகாதார அமைச்சு, வழமையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. எனினும், சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையிலும் ஒருவகையான காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தை விடவும், டெங்கு நுளம்புகளினால் ஏற்படும் காய்ச்சல் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஆகையால், சாதாரண காய்ச்சலென வீட்டு வைத்தியத்தை மட்டுமே நம்பியிருக்காது. அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று, தேவையான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

கொவிட்-19 வைரஸின் ஜே.என்-1 துணை வகையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. அத்துடன், இந்த துணை வகை தொடர்பில் மேலும் ஆராயப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. எனினும், இந்த வைரஸ், இந்தியா, சீனா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளான ஒருவர், கண்டியில் மரணமடைந்துள்ளதாக செய்தி வெளியாகியிருந்தது. மற்றுமொரு தடுப்பூசியைக் கொள்வனவு செய்யும் திராணியில் அரசாங்கம் இல்லை. இதேவேளை, இலங்கையின் சுகாதாரத் துறையின் மீது அதீத நம்பிக்கையை வைக்கும் அளவுக்கு மக்கள் தயாராகவும் இல்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

சுகாதாரம், ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் மிகமிக முக்கியமானது. ஆரம்பச் சுகாதார பழகத்தை வழக்கமாக்கிக்கொண்டாலே பல நோய்கள் தொற்றிக்கொள்வதில் இருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். தொற்று நோய்களில் இருந்து மட்டுமன்றி, தொற்றா நோய்களில் இருந்தும் பாதுகாக்கவேண்டிய நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கொவிட்-19 இல் இருந்து பெற்றுக்கொண்ட அனுபவம் ஏராளம். அதனை ஒரு பாடமாக்கிக்கொண்டு, எதிர்காலங்களில் இவ்வாறான தொற்றுக்களில் இருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக, சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். கொரோவுக்கு தடுப்பூசியை ஏற்றிக்கொண்டுவிட்டோம். இனி, எந்தவொரு கவலையும் அச்சமும் இல்லையெனக் கவனமின்றி அசட்டையாக இருப்பது பேராபத்துக்கே வழிசமைக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# இருப்புக்காக போராடும் மொட்டும் யானையும்



எம்.எஸ்.எம். ஐயூப்

இன்றிலிருந்து ஐந்து நாட்களில் வரும் புத்தாண்டு, "2024 தேர்தல் ஆண்டு" என பலர் கூறுகின்றனர். சட்டப்படிப் பார்த்தால் 2024இல் ஜனாதிபதித் தேர்தல் தான் நிச்சயமாகவே வர இருக்கிறது. உயர் நீதிமன்றம் கட்டளையிட்டால் பணம் இல்லை என்ற அடிப்படையற்ற காரணத்தை முன்வைத்து காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தல்களும் வரும் புத்தாண்டில் நடைபெற வேண்டும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஐக்கிய தேசிய கட்சித் தலைமை 2017இல் சட்டச் சிக்கலொன்றை உருவாக்கித் தடுத்து வைத்துள்ளது. அக்கட்சித் தலைமைக்கு ஜனநாயகத்தைப் பற்றிய அக்கறை இருந்தால் அத்தேர்தல்களும் எதிர்வரும் ஆண்டில் நடைபெற வேண்டும். ஆயினும் ஐ.தே.கவும் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் தேர்தல் என்றால் அஞ்சி நடுங்கும் நிலையில், உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களோ மாகாண சபைத் தேர்தல்களோ அடுத்த வருடம் நடைபெறுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

ஜனாதிபதியின் நெருங்கிய சகாவும் ஐ.தே.கவின் ஒரே பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவின் சில கூற்றுக்களை ஆராயும்போது, சட்டப்படி நடைபெறவேண்டிய ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறுமா என்ற சந்தேகமும் எழுகிறது. அவரது அக்கூற்றுக்கள் ஜனாதிபதியின் தேவைக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன என்று பலர் கூறுகின்றனர்.

பொருளாதாரத்தை எவ்வாறு தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுப்பது என்று ஜனாதிபதி ரணிலின் போட்டியாளர்களுக்குச் சிந்தித்தும் பார்க்க முடியாத நிலையில், அவரையே மீண்டும் போட்டியின்றி தெரிவு செய்வதே நாட்டுக்கு நன்மையளிக்கும் என்று வஜிர கூறியிருந்தார்.

இதனையடுத்து, தென்பகுதியில் கடந்த நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர், சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் மேலும், 12 வருடங்களுக்கு ரணிலையே ஜனாதிபதியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றார். பாராளுமன்றத் தேர்தலை ஆறு ஆண்டுகளுக்கு ஒத்திப் போடுவதற்காக ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன 1982இல் நடத்திய சர்வஜன வாக்கெடுப்பை அவர் அந்தக் கூட்டத்தில் உதாரணமாக எடுத்துக் காட்டினார்.

தேசிய ரீதியில் உடன்பாடொன்றை ஏற்படுத்திக்கொண்டு ரணிலை மட்டும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்றும் அதற்காக ஏனைய கட்சிகளின் வேட்பாளர்கள் தத்தமது வேட்பு மனுக்களைச் சமர்ப்பிக்காதிருக்க வேண்டும் என்றும் வஜிர கடந்த ஒக்டோபர் 24ஆம் திகதி ஊடகவியலாளர்களிடம் கூறினார். அதன் மூலம் தேர்தலுக்கு செலவாகும் 1,300 கோடி ரூபாவை மின் கடனத்தைக் குறைப்பதற்காகவும் மக்களுக்கு வேறு சலுகைகளை வழங்குவதற்காகவும் உபயோகிக்க முடியும் என்றும் அவர் அப்போது கூறியிருந்தார்.

ரணிலைப் போட்டியின்றி தெரிவு செய்யவேண்டும், ரணில் மேலும் 12 ஆண்டுகள் நாட்டை ஆளும் வகையில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டும், ஏனைய வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைச் சமர்ப்பிக்காதிருக்க வேண்டும் போன்ற ஆலோசனைகள் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள ஐ.தே.க விரும்புவதையே காட்டுகிறது. தோல்வி காண்போம் என்ற அச்சமே இதற்கு காரணம். என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது பெரும்பாலும் அவரது கருத்து அல்ல. இது அவரது தலைவர் நாட்டு மக்களின் நிலைப்பாட்டை அளந்தறிய அவரைப் பாவித்து இக்கருத்துக்களை விதைக்கிறார் என்றும் ஊகிக்கலாம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் 100 இலட்சம் (ஒரு கோடி) வாக்குகளைப் பெறுவார் என்று வஜிர கூறியிருந்தார். ஜனாதிபதியின் கொள்கைகள் காரணமாக அடுத்த ஏப்ரல் மாதமாகும்போது நாடு அடையும் நிலையை ஊகித்துப் பார்த்தே நான் அவ்வாறு கூறுகிறேன் என்றும் அவர் கூறியிருந்தார். ஜனாதிபதி ரணிலுக்கு மேலும் 12 ஆண்டுகளுக்கு இந்நாட்டை நிர்வகிக்க இடமளித்தால் நாடு உலகில் பலமான நாடாக மாறும் என்றும் அவர் மீண்டும் கூறினார்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் அதாவது கடந்த பொதுத் தேர்தலின்போது, ஐ.தே.க முழு நாட்டிலிருந்தும் மூன்று இலட்சத்துக்கும் குறைந்த வாக்குகளையே பெற்றது. அவ்வாறான கட்சி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வஜிர கூறுவதைப் போல், ஒரு கோடி வாக்குகளைப் பெறும் அளவுக்கு பிரபல்யம் அடைந்துள்ளதா? கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்த ஐதேக இன்னமும் விரும்பவில்லை என்பது அவரது கூற்றை சவாலுக்குள்ளாக்குகிறது. அந்த அளவு ஐதேக பிரபல்யம அடைந்து இருந்தால் ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து அத்தேர்தல்களைத் தடுத்து இருக்க மாட்டார்.

அதேவேளை, சுகாதார கொள்கை நிறுவனம் ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள தேர்தல் வெற்றி வாய்ப்புக்களைப் பற்றி இவ்வாண்டு பல கருத்துக் கணிப்புக்களை நடத்தியுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் படி மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க 51 வீத மக்கள் விருப்பத்தை வென்று இருந்தார். சஜித் பிரேமதாச 30 வீதமாகவும் ரணில் 13 வீதமாகவும் மக்களின் விருப்பத்தை வென்றிருந்தனர். இக்கருத்துக் கணிப்பின் முடிவுகள் நூறு வீதம் சரியாக இருக்காது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியால் அழிவின் விளிம்புக்கே சென்ற நாடு, இப்போது மீண்டெழுந்துள்ளதாகவும் எனவே மக்கள் அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்வதாகவும் அதே மக்களை நம்பகைவக்க ஐ.தே.கவும் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் முயல்கின்றன. ஆனால், நிலைமை அதுவல்ல.

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தின் கீழ், அந்நிதியத்திடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் புதிதாகக் கடனுக்குப் பணம் கிடைத்ததாலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாகவும் எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் கடந்த வருடம் காணப்பட்ட மைல் கணக்கு நீளமான கியூ வரிசைகள் போன்ற பொருளாதார நெருக்கடியின் கடும் தாக்கங்கள் இப்போது இல்லை என்பது உண்மையே. பொருளாதார நெருக்கடியால் மக்களின் வருமானம் குறைந்தது. அந்த நிலைமையில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை. பணவீக்கம் பற்றிய மத்திய வங்கியின் புள்ளிவிவரங்களின்படி சந்தையில் விலைவாசி இல்லை. ஏனெனில் உயர்ந்த விலைவாசி இறங்கி வர மறுக்கிறது.

இதனால் முன்னொருபோதும் இல்லாதவாறு பொதுமக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான உறவுகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மேலும், இதுவரை நாட்டை ஆட்சி புரிந்த கட்சிகளிடம் தீர்வு இல்லாததால் பெரும்பாலானோர் மக்கள் விடுதலை முன்னணியின் பக்கம் சாயத் தொடங்கியிருக்கின்றனர். அதனையே மேற்படி கருத்துக் கணிப்பு சுட்டிக் காட்டுகிறது.

அடுத்த வாரத்தில் அணியில் நிறைவேற்றப்பட்ட வற் திருத்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது. அவ்வரியானது மனிதனின் சகல கொடுக்கல் வாங்கல்களையும் வெகுவாக பாதிக்கும். இப்போது மக்கள் இதுபோன்ற பொருளாதார விடயங்கள் தொடர்பாக முன்னரை போல் பிரிந்த செயலாற்றுவதாகத் தெரியவில்லை. அதுவும் ஐதேகவையும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியையும் பாதிக்கிறது.

இந்த நிலையில், பலமான கட்சிகளுடன் கூட்டு சேராவிட்டால் ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் எந்தத் தேர்தலிலும் வெற்றி பெறமுடியாது என்பதே தற்போதைய நிலைமையாகத் தெரிகிறது. அவ்விரண்டு கட்சிகளுக்கும் தேசிய மக்கள் சக்தியுடனோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியுடனோ கூட்டுச் சேரும் வாய்ப்பேதும் இல்லை. ஆனுர குமார திசாநாக்கவும் சஜித் பிரேமதாசவும் அவ்வாறான கூற்றை நிராகரித்து கருத்து வெளியிட்டு இருக்கின்றனர்.

மேற்படி கருத்துக் கணிப்பின்படி, பொதுஜன முன்னணி குறைந்தது 10 வீத மக்கள் விருப்பத்தையாவது வென்றெடுக்கத் தவறியுள்ளது. பொதுஜன முன்னணியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உடல்நலம் குன்றியிருக்கும் நிலையில், அக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைத் தேடிக்கொள்ள கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளது. அவர்கள் இப்போது வர்த்தகர் தம்மிக்க பெரேராவின் பெயரையும் அதற்காக ஆராய்ந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், ஐ.தே.கவுக்கு கூட்டணி அமைக்க இருக்கும் ஒரே பிரதான கட்சி பொதுஜன முன்னணி மட்டுமேயாகும். அவ்வாறு கூட்டுச் சேர்ந்தாலும் மேற்கூறிய கருத்துக் கணிப்பின்படி அவர்களுக்கு மூன்றாவது இடம் தான் கிடைக்கும்.

எனவே, அக்கட்சிகளின் தேர்தல் பீதி நியாயமானதாகும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மன வலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத்தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்துவிடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில் ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம்.

கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருத்தலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களைக்கூட பெருந்தன்மையுடன் மன்னித்துவிடும் நபர்கள், பயத்தால் அல்ல, தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மேலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர்நிலைக்கு வரக்கூடாது எனும் எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம்.

எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவணைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

நன்றி– பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நகரத்துக்குள் பேருந்துகள் வர வேண்டும்

முல்லைத்தீவு நகரத்தில் இருந்து 500 மீற்றருக்கு அதிகமான தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பேருந்து நிலையத்தினால் அப்பகுதி மக்கள் பாரிய சிரமத்திற்கு முகங்கொடுத்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அருகில் 2010ஆம் ஆண்டின் பின்னர் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் இருந்து பணியினை தொடங்குகின்ற அனைத்து பேருந்துகளும் முல்லைத்தீவு நகரத்திற்குள் வருகை தந்து 5 நிமிடங்கள் கழித்து தமது பணியினை தொடங்குமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கமைய ஒரு மாத காலம் அனைத்து பேருந்துகளும் நகரிற்குள் வந்துள்ள நிலையில், தற்போது கொக்குளாய் பயணிக்கும் பேருந்து மட்டுமே நகரத்திற்குள் சென்று திரும்புவதாகவும் ஏனைய பேருந்துகள் நகரத்திற்குள் செல்வதில்லை எனவும் பொது மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நகரத்தில் இருந்து சுமார் 500 மீற்றருக்கு அதிகமான துரம் பயணிகள் நடந்து சென்றே புதிய பேருந்து நிலையத்திற்கு வர வேண்டியுள்ளதால் இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



# ஆழிப்பேரலை நினைவேந்தல்...



ஆழிப்பேரலை சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு, டிசெம்பர் 26ஆம் திகதியுடன் 19ஆவது ஆண்டு நிறைவடைந்தது. இதனை நினைவு கூர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. (தமிழ்மிரர் நிருபர்கள்)

மட்டக்களப்பில்...






யாழ்ப்பாணத்தில்...





காரைதீவில்...






பாசிக்குடாவில்...





கல்முனையில்...



புத்தலவில்





புதுக்குடியிருப்பில்...





திருகோணமலையில்...





மூதூரில்...





கிண்ணியாவில்...





மாளிகைகாட்டில்...





ஹட்டனில்...






ரஷ்யா

# போர் நிறுத்தத்திற்கு தயாராகும் புட்டின்

ரஷ்யா கடந்த ஆண்டு தனது அண்டை நாடுகளில் ஒன்றான உக்ரேன் மீது போர் தொடுத்தது. அந்த போர் முடிவுக்கு வரவில்லை.

உக்ரைனுக்குள் புகுந்த ரஷ்ய படைகள் கணிசமான இடத்தை தங்கள் வசம் கைப்பற்றி வைத்துள்ளன. என்றாலும் உக்ரைனை இது வரை ரஷ்யாவால் பணிய வைக்க இயலவில்லை.

இதன் காரணமாக ரஷ்யாவால் முழுமையாக போரை முடிக்க இயலவில்லை.



இந்நிலையில், உக்ரேன் மீதான படையெடுப்பு காரணமாக ரஷ்யாவுக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்புகள் ஏற்பட தொடங்கியுள்ளது.

இதையடுத்து, உக்ரேன் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய ஜனாதிபதி புட்டின் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. ஆனால், அதை அவர் இதுவரை அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை.

உக்ரைனுக்கும் தனக்கும் நெருக்கமாக இருக்கும் சிலர் மூலம் போர் நிறுத்தம் செய்ய கடந்த செப்டெம்பர் மாதம் புட்டின் பேச்சுவார்த்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்



# ஆறாம் வகுப்பு வரை கல்வி

ஆப்கானிஸ்தானில் 1996 முதல் தலிபான் அமைப்பினர் ஆட்சியில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். ஆனால், 2001இல் அமெரிக்க இராணுவம் அவர்களை ஆட்சியிலிருந்து தூக்கியடித்ததும், அவர்கள் பலவீனமடைந்திருந்தனர்.

கடந்த 2021இல் அமெரிக்க படைகள் அந்நாட்டை விட்டு வெளியேறின. தொடர்ந்து தலிபான் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. சுமார் 20 வருடகாலம் கடந்து ஆட்சியை கைப்பற்றிய தலிபான் அந்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. தலிபானின் புதிய சட்டங்களின்படி, பெண் குழந்தைகள் கல்வி கற்பது ஆறாம் வகுப்புடன் நிறுத்தப்படும். இதற்கு பல உலக நாடுகளும் பெண்ணிய சிந்தனையாளர்களும் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் அவற்றை ஆப்கானிஸ்தான் புறக்கணித்தது.

ஜெர்மனி

# 3,000 ஆண்டுகள் பழைமையான வாள்

ஜேர்மனியில் கல்லறை ஒன்றில் இருந்து 3,000 ஆண்டுகள் பழைமைவாய்ந்த வாள் ஒன்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும், இந்த ஆயுதம் இன்னும் பிரகாசிக்கும் அளவுக்கு நல்ல நிலையில் உள்ளதாக புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளனர். இந்த வாள் கி.மு. 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் மூன்று பேர் புதைக்கப்பட்ட கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

Live Science இன் அறிக்கையின்படி, இந்த வாள் பவேரியாவின் நோர்ட்லிங்கன் டவுனில் உள்ள ஒரு ஆண், பெண் மற்றும் குழந்தையின் கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நினைவுச்சின்னப் பாதுகாப்புக்கான பவேரிய மாநில அலுவலகம்



வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, மூவரும் ஒன்றன்பின் ஒன்றாகப் புதைக்கப்பட்டதாகத் தெரிகிறது, ஆனால் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று கூறியுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, "வாள் இன்னும் பிரகாசமாக உள்ளது. ஏனெனில் அது அப்போதே மிகவும் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது. இந்த வாள், வெண்கலத்தால் செய்யப்பட்ட எண்கோண கைப்பிடியைக் கொண்டுள்ளது. வெண்கலத்தில் தாமிரம் உள்ளதால் இப்போது இது பச்சை நிறத்தில் உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தியபிரதேசம்

# "ஏழைகளுக்கான சேவைக்கு அரசு முன்னுரிமை"

மத்தியபிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள ஹுகும்சந்த் மில் கடந்த 1992இல் மூடப்பட்டது. தொழிலாளர்கள் தங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை கேட்டு, நீண்டகால சட்டப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். மத்தியபிரதேச அரசு மேற்கொண்ட முயற்சியின் பலனாக, மாநில வீட்டு வசதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு,கடந்த டிசெம்பர் 20ஆம் திகதி நிலுவைத் தொகை உயர் நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டது.



இந்நிலையில், மில் தொழிலாளர்களுக்கு ரூ.224 கோடி மதிப்பிலான நிலுவைத்தொகை வழங்கும் நிகழ்ச்சி திங்கட்கிழமை (25) இந்தூரில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலான பங்கேற்று பேசியதாவது, "நீண்டகாலமாக நிலுவையில் இருந்த தொழிலாளர் பிரச்சினையை தீர்த்து வைத்ததற்காக மத்திய பிரதேச அரசை பாராட்டுகிறேன். இதன் மூலம் 4,800க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பலன் அடைவார்கள்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் பிறந்த நாளில் அனுசரிக்கப்படும் நல்லாட்சி தினத்தில் தொழிலாளர்களின் ஆசீர்வாதங்களைப் பெறுவது இரட்டை இன்ஜின் பா.ஜ.க அரசுக்கும் மாநில மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும்.ஏழைகள், இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் ஆகிய நான்கு ஜாதிகள் எனக்கு மிகவும் முக்கியம்.

ஏழைகளுக்கான சேவை, தொழிலாளர்களுக்கு மரியாதை, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மரியாதை ஆகியவை எங்கள் முன்னுரிமைப் பணியாக உள்ளது என கூறியுள்ளார்.

உத்தரபிரதேசம்

அயோத்தி ராமரை தரிசிக்க செல்வோருக்கு

# இலவசமாக 275 சிறப்பு ரயில்கள்

உத்தரபிரதேசம் அயோத்தியில் ராமர் கோவிலை அடுத்த மாதம் (ஜனவரி) 22ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

கோவில் திறப்பு விழாவில் பங்கேற்க வருமாறு முக்கிய பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாடு முழுவதிலும் இருந்து 5 கோடி பேர் அயோத்தி ராமர் கோவிலில் இலவசமாக தரிசனம் செய்ய பா.ஜ.க. ஏற்பாடு செய்துள்ளது. இதற்காக, 'ராம் தர்ஷன் அபியான்' எனும் பெயரில் ஜனவரி 24 தொடங்கும் மார்ச் 24 வரை ஆன்மிக யாத்திரை நடைபெற உள்ளது.



இதற்காக, நாடு முழுவதிலும் இருந்து 275 சிறப்பு ரயில்கள் இயக்க ஏற்பாடு செய்யப்பட உள்ளது. இதில், உணவு வசதிகளுடன் 5 கோடி பேர் இலவசமாக பயணம் செய்யலாம். மேலும், வாரணாசியில் நடைபெறும் காசி தமிழ் சங்கம்-2 நிகழ்ச்சிக்கும், தமிழ் நாட்டில் இருந்து மக்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

## 4,000 யை தாண்டியது ஜேஎன் 1 பாதிப்பு

இந்தியாவில் உருமாற்றம் அடைந்த ஜேஎன் 1 வகை கொரோனா வைரஸ் அச்சத்தை ஏற்படுத்தி வரும் நிலையில், தற்போது கொரோனாவால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்நிலையில் திங்கட்கிழமை (25) கொரோனா தொற்று 628 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இதனால் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4,054ஆக உயர்ந்துள்ளது. கேரளாவில் 128 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கேரளாவில் கொரோனாவுக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது 4,50,09,248 (4.50 கோடி) ஆக உள்ளது. தொற்றிலிருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 4,44,71,860 (4.44 கோடி) ஆக உயர்ந்துள்ளது. இதனிடையே, கொரோனா தொற்றுப் பரவலால் கேரள மக்கள் அச்சமடைய தேவையில்லையென அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜோர்ஜ் கூறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் அவுஸ்திரேலியா

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் முன்னிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மெல்பேணில் நேற்று ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் ஷண் மசூட், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா நிதானமாக ஆரம்பித்த நிலையில், டேவிட் வோர்னரை 38 ஓட்டங்களுடனும், உஸ்மான் கவாஜாவை 42 ஓட்டங்களுடனும் குறிப்பிட்ட இடைவெளிகளில் அக்ஹா சல்மான், ஹஸன் அலியிடம் பறிகொடுத்தது.




பின்னர் மழை குறுக்கிட்டு மீண்டும் ஆட்டம் ஆரம்பித்தபோது குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் ஆமிர் ஜமாலிடம் 26 ஓட்டங்களுடன் ஸ்டீவன் ஸ்மித் வீழ்ந்தார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றுள்ளது. தற்போது களத்தில் மர்னுஸ் லபுஷைன் 44 ஓட்டங்களுடனும், ட்ரெவிஸ் ஹெட் ஒன்பது ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

# பார்சிலோனாவிலிருந்து விலகும் ஜுலெஸ் கூன்டே?


ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் பெட்டிஸிலிருந்து பின்களவீரர் சடி றியாட்டை அக்கழகத்திலிருந்து மீள அழைக்க இன்னொரு லா லிகா கழகமான பார்சிலோனா திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில், நடப்புப் பருவகால முடிவில் பார்சிலோனாவின் பின்களவீரர்களான அன்ட்றியாஸ் கிறிஸ்டியென்சன் அல்லது ஜுலெஸ் கூன்டே ஆகியோரில் ஒருவர் கழகத்தை விட்டு வெளியேறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.



நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான

# பாகிஸ்தானின் பயிற்றுவிப்பாளராக யசீர் அரஃபாத்



நியூசிலாந்துக்கெதிரான இருபதுக்கு-20 தொடருக்கான பாகிஸ்தானின் பயிற்சியாளர் அணியில் பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான யசீர் அரஃபாத் இணைந்துள்ளார்.

உயர் பெறுபேற்றுப் பயிற்சியாளராக அரஃபாத் நியமிக்கப்பட்டுள்ளதோடு, அப்பதவியில் தற்போதுள்ள சைமன் ஹெல்மொட்டை அவர் பிரதியிடுகிறார்.




வெளிநாட்டுத் தொடர்களில் விளையாட

# முஜீப், நவீன், பரூக்கிக்குத் தடை

ஆப்கானிஸ்தானின் சுழற்பந்துவீச்சாளர் முஜூப் உர் ரஹ்மான் மற்றும் வேகப்பந்து வீச்சாளர்கள் நவீன் உல் ஹக், பஸல்ஹக் பரூக்கி ஆகியோரின் வருடாந்த ஒப்பந்தங்களை தாமதப்படுத்தியுள்ள அந்நாட்டு கிரிக்கெட் சபை, இரண்டாண்டுகளுக்கு தடையில்லாச் சான்றிதழ்கள் இல்லையெனவும் அறிவித்துள்ளது. இவர்கள் தற்போது கொண்டுள்ள தடையில்லாச் சான்றிதழ்களை மீளப் பெறுதலும் இதில் உள்ளடங்குகின்றது.

தங்களை ஒப்பந்தங்களிலிருந்து விடுவிக்கும் விருப்பத்தை சபையிடம் கூறியதோடு, வெளிநாட்டுத் தொடர்களில் விளையாட அனுமதியும் கோரியிருந்தனர்.



# சிற்றியிலேயே தொடரப் போகும் அல்வரேஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ஜீலியன் அல்வரேஸ், கழகத்தில் தான் மகிழ்வாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டுக்கு 23 வயதான அல்வரேஸ் செல்வார் எனக் கூறப்பட்ட நிலையிலேயே குறித்த கருத்தை அல்வரேஸ் வெளிப்படுத்தியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 27 டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.